உங்கள் அபிமான தினதமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்! கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 14.08.2026 • மலர் 04 • இதழ்: 226 • வெள்ளி

• Edition : Nagercoil • 14.08.2026 • Vol : 04 • Issue : 226 • Page : 4 • Rs. 5/-

# 100 நாட்களில் ரூ.1 லட்சம் கோடி முதலீடுகள் ஈர்ப்பு

## 1,21,788 பேருக்கு வேலை வாய்ப்புகள் உறுதி




சென்னை: தமிழக முதல்வர் விஜய் முன்னிலையில் (ஆக.13) சென்னையில் நடைபெற்ற 'வெற்றி தமிழ்நாடு முதலீட்டாளர்கள் மாநாட்டில்' தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில், 67,452 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 1,06,998 வேலைவாய்ப்பு உருவாக்கும் வகையில் 97 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டதாக தமிழ்நாடு தொழில் துறை தெரிவித்துள்ளது.

மேலும், 'தமிழகத்தில் தவெக அரசு பொறுப்பேற்ற 100 நாட்களில் 1 லட்சம் கோடி ரூபாய்க்கும் மேற்பட்ட தொழில் முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளன. இதன்மூலம் 1,21,788 நபர்களுக்கு வேலை வாய்ப்புகள் உறுதியளிக்கப்பட்டு உள்ளன' என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பு: சென்னையில், நடைபெற்ற 'வெற்றி தமிழ்நாடு முதலீட்டாளர்கள் மாநாட்டில்', தமிழக முதல்வர் ச.ஜோசப் விஜய் முன்னிலையில் ரூ.67,452 கோடி முதலீடு மற்றும் 1,06,998 வேலைவாய்ப்பு உருவாக்கும் வகையில் 97 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும், 4,476 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 5,074 வேலைவாய்ப்பு உருவாக்கும் வகையில் 8 திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டன.

2,676 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 1,550 வேலைவாய்ப்பு உருவாக்கும் வகையில் 5 திட்டப் பணிகளை முதல்வர் தொடங்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து, செல்பயோஸ், பேட்டர், ZF, HD சப்ளை, க்ரீன் சிக்னல், HL மேண்டோ, டைம்லர், வேல்முருகன் ஹெவி இன்ஜினீயரிங் மற்றும் ஜீப்ரானிக்ஸ் ஆகிய 9 தொழில் நிறுவனங்களில், பல்வேறு பணியிடங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட 20 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளையும் முதல்வர் வழங்கினார்.

மேலும், தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தின் சார்பில் திருச்சி மாவட்டம், மொண்டிப்பட்டியில் 350 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள டிஷ்யூ காகிதம் வணிக உற்பத்திக்கான உற்பத்தித்திட்டம்திறந்து வைக்கப்பட்டது.

தென்னிந்தியாவில் முதன்முறையாக டிஷ்யூ காகித உற்பத்திக்கான வணிகத்தைத் தொடங்குவதால், உலகளாவிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி 'லூமியா' என்ற பிராண்டின் கீழ் ஃபேஷியல், நாப்கின், டவல் மற்றும் கழிவறைப் பயன்பாட்டிற்கென நான்கு வகைகளில் உயர்தர டிஷ்யூ காகிதங்கள் வணிகப்படுத்தப்படும். இதனால் இப்பகுதியின்தொழில்வளர்ச்சியும் மக்களின் வாழ்வாதாரமும் மேம்படும். தமிழ்நாடு தொழில் மேம்பாட்டுக் கழகத்தின், காஞ்சிபுரம் மாவட்டம், வல்லம் வடகலில், 250 கோடி ரூபாய் செலவிலான ஏரோஹப் வளாகத்தைத் திறந்து வைத்தார்.

சிப்காட் தொழிற்பூங்காவில் 122.08 கோடி ரூபாய் செலவிலான 11 புதிய கட்டிடங்களும், தமிழ்நாடு தொழில்துறை வீட்டுவசதி பிரைவேட் லிமிடெட் சார்பாக 55.66 கோடி ரூபாய் செலவிலான 2 புதிய கட்டிடங்களும் என மொத்தம் 777.74 கோடி ரூபாய் செலவிலான முடிவுற்ற திட்டப்பணிகளை முதல்வர் திறந்து வைத்தார். வர்த்தகம், வணிகம், இருதரப்பு முதலீடுகள் மற்றும் சகோதர நகர ஒத்துழைப்பு, இணையப் பாதுகாப்பு, செயற்கை நுண்ணறிவு மற்றும் மேம்பட்ட தொழில்நுட்பங்கள், செமிகண்டக்டர் துறையில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி மற்றும் தொழில்நுட்பப் பரிமாற்றம் ஆகிய துறைகளில், கஜகஸ்தான், நியூசிலாந்து மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளைச் சேர்ந்த நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளுடன், தமிழ்நாடு 7 நிறுவன ரீதியான புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது.

தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் 67,452 கோடி ரூபாய் உறுதியளிக்கப்பட்ட முதலீட்டில் 1,06,998 நபர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட வேலைவாய்ப்புகளை உருவாக்கிடும் வகையில், 97 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் முதல்வர் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டன.

இதில் குறிப்பிடத்தக்க இன்னொரு அம்சம் என்னவென்றால், 55 திட்டங்கள் புதிய திட்டங்களாகவும் (Green field), 50 திட்டங்கள் ஏற்கனவே செயல்பட்டுவரும் நிறுவனங்களின் விரிவாக்கத் திட்டங்களாகவும் (Brown field) உள்ளன.

இன்று முதல்வர் முன்னிலையில் கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் அடிப்படையில் திருவள்ளூர், காஞ்சிபுரம், திண்டுக்கல், கடலூர், சென்னை, தூத்துக்குடி, சிவகங்கை, கிருஷ்ணகிரி, செங்கல்பட்டு, தென்காசி, திருநெல்வேலி, ராணிப்பேட்டை, வேலூர், கோயம்புத்தூர், ராமநாதபுரம், ஈரோடு, கரூர், நாமக்கல், திருவண்ணாமலை, திருப்பூர், புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, நாகப்பட்டினம் போன்ற மாவட்டங்களில் தொழிற்திட்டங்கள் பரவலாக மேற்கொள்ளப்படவுள்ளது.

இதில் ராமநாதபுரம் மாவட்டத்தில், முதன்முதலாக தொழில் திட்டம் தொடங்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.

100 நாட்களில் 1 லட்சம் கோடிக்கும் மேல் முதலீடுகள்:

இந்த மாநாட்டிற்கு முன் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மற்றும் இன்றைய "வெற்றி தமிழ்நாடு முதலீட்டாளர்கள் மாநாட்டில்" மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலமாக, ஆட்சிப் பொறுப்பேற்ற 100 நாட்களில் 1 லட்சம் கோடி ரூபாய்க்கும் மேல் முதலீடுகள் (1,02,514 கோடி ரூபாய்) ஈர்க்கப்பட்டுள்ளன. இதன்மூலம் 1,21,788 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உறுதியளிக்கப்பட்டுள்ளன என்று அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில், தொழில் துறை அமைச்சர் எஸ். கீர்த்தனா, தலைமைச் செயலாளர் முனைவர் மு. சாய்குமார், பல்வேறு துறைச் செயலர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## கேரளாவில் இருந்து குமரிக்கு மோட்டார் சைக்கிள் குட்கா கடத்தியவர் கைது

நாகர்கோவில், ஆக. 14

குமரி எல்லை பகுதியான கனியக்காவிளை போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் மகேந் தலைமையிலான போலீசார் நேற்று முன்தினம் மாலை ஒற்றாமரம் என்ற பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தார். அப்போது அந்த வழியாக கேரள பதிவெண் கொண்ட மோட்டார் சைக்கிள் ஒன்று வந்தது. சந்தேகம் அடைந்த போலீசார் அதை தடுத்து நிறுத்தி அந்த வாகனத்தை ஓட்டி வந்த நபரிடம் விசாரணை நடத்தினர்.

அப்போது வாகனத்தில் வந்த நபர் போலீசாரின் கேள்விகளுக்கு முன்னுக்கு பின் முரணான பதில் அளித்தபடி இருந்தார். இதை அடுத்து மோட்டார் சைக்கிளில் இருந்த மூடைகளை சோதனை செய்தபோது அதில் தடை செய்யப்பட்ட குட்காபுகையிலை 23 கிலோ இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

அவற்றை போலீசார் பறிமுதல் செய்தனர். மேலும் விசாரணை நடத்திய போது அவர் கேரள மாநிலம் திருவனந்தபுரம் நேமம் என்ற இடத்தை சேர்ந்த அஜிஸ் (51) என்பது தெரிய வந்தது. அவரை கைது செய்தனர்.

அவரிடம் நடத்திய விசாரணையில் அவர் குட்காவை திருவனந்தபுரத்தில் இருந்து கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மோட்டார் சைக்கிள் கடத்திக்கொண்டு வந்ததாக கூறினார். அவர் குமரி மாவட்டத்தில் உள்ள கடைகளுக்கு சப்ளை

செய்ய கொண்டு வந்தாரா? இதில் வேறு நபர்களுக்கு தொடர்பு உண்டா? என்பது குறித்தும் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## நட்டாலம் பகுதியில்

## 2 வாகனங்களில் கேரளாவுக்கு கடத்த முயன்ற 2700 லிட்டர் மண்ணெண்ணெய் பறிமுதல்



மார்த்தாண்டம், ஆக.14

மார்த்தாண்டம் அருகே நட்டாலம் பகுதியில் விளவங்கோடு வட்ட வழங்கல் அதிகாரி அனிதா குமாரி தலைமையில் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது சந்தேகத்திற்கிடமாக வந்த இரண்டு பிக்கப் வாகனங்களை அதிகாரிகள் நிறுத்த முயன்றபோது, ஓட்டுநர்கள் வாகனங்களை நிறுத்தாமல் வேகமாக சென்றனர். இதையடுத்து அதிகாரிகள் வாகனங்களை துரத்திச் சென்று சுமார் பத்து கிலோ மீட்டர் தொலைவில் மேல்புறம் பகுதியில் மடக்கிப் பிடித்து சோதனை செய்தனர். அப்போது ஓட்டுனர்கள் தப்பி ஓடினார்கள் . இதில் இரண்டு வாகனங்களிலும் அரசால் மீனவர்களுக்கு மானிய விலையில் படகுகளுக்கு பயன்படுத்தப்படுத்த வழங்கப்படும் வெள்ளை நிற மண்ணெண்ணெய் 2 ஆயிரத்து 700 லிட்டர் கேரளாவுக்கு கடத்திச் செல்ல முயன்றது தெரிய வந்தது.

இதையடுத்து மண்ணெண்ணெய் மற்றும் இரண்டு வாகனங்களையும் பறிமுதல் செய்த அதிகாரிகள், தப்பியோடிய ஓட்டுநர்கள் மற்றும் கடத்தலில் தொடர்புடையவர்கள் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## மண்டைக்காடு பகுதியில் ஏவிளம் கால்வாய், நீர்நிலைகளை கலெக்டர் நேரில் ஆய்வு



நாகர்கோவில், ஆக.14

மண்டைக்காடு பகுதியில் அமைந்துள்ள நீர்நிலைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் நேற்று 13.ம் தேதி நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு கூறியதாவது :

குமரி மாவட்டத்தில் உள்ள அனைத்து நீர்நிலைகளையும்தூர்வாரி, பொது மக்கள் மற்றும் விவசாயிகளின் பயன்பாட்டிற்கு கொண்டு வரும் வகையில் திட்ட வரைவு தயாரிக்கப்பட்டு, போதிய நிதியாதாரம் பெறப்பட்டு பணிகள் நடைபெற்றுவருகின்றன. அதன் ஒரு பகுதியாக, கேரளா எல்லையிலிருந்து குளச்சல் வரை செல்லக்கூடிய வரலாற்றுச் சிறப்புமிக்க பழமையான ஏவிளம் கால்வாயைத் தூர்வாருவதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக புதூர் மற்றும் மண்டைக்காடு அருள்மிகு பகவதி அம்மன் திருக்கோவில் அருகில் அமைந்துள்ள நீர்நிலைகள்நேரில்ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்நீர்நிலைகளை முழுமையாகத் தூர்வாருவதற்குத் தேவையான திட்ட வரைவை உடனடியாகத் தயார் செய்து, பணிகளை விரைவில் தொடங்குமாறு நீர்வளத்துறை செயற்பொறியாளருக்கு அறிவுறுத்தப்பட்டது.

மேலும் அருள்மிகு மண்டைக்காடு பகவதி அம்மன் கோயிலுக்கு வருகை தரும் பக்தர்கள், கடலில் நீராடிவிட்டு அல்லது கால்நனைத்துவிட்டு வந்து கோவிலுக்குச் செல்வதற்கு வசதியாக, கோவில் அருகில் உள்ள குளத்தினை உடனடியாகச் தூர்வாரி சீரமைத்து பயன்பாட்டிற்குகொண்டு வரவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறு கூறினார்.

நடைபெற்ற ஆய்வில் நீர்வளத்துறை செயற்பொறியாளர் வசந்தி, கல்குளம் வட்டாட்சியர் ராஜேஷ், உதவி செயற்பொறியாளர்கள், துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

## குமரி தன்னிறைவு பெற்ற மாவட்டமாக மாற வேண்டும்; மக்கள் தொடர்பு முகாமில் கலெக்டர் பேச்சு



நாகர்கோவில், ஆக.14

கன்னியாகுமரி மாவட்ட வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் சார்பில், கல்குளம் வட்டம் வெள்ளிசந்தை பகுதியில் அமைந்துள்ள தனியார் திருமண மண்டபத்தில் நேற்று மக்கள் தொடர்பு முகாம் நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் கலந்துகொண்டு பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டிருந்து பல் துறை பணி விளக்க அரங்குகளை பார்வையிட்டும், தகுதியான பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். தொடர்ந்து அவர் பேசுகையில்: இந்த முகாம்களில் சம்பந்தப்பட்ட கிராமத்திற்குச் சென்று பெறப்பட்ட மனுக்களில் உடனடியாகத் தீர்வு காணக் கூடிய பட்டா திருத்தங்கள், முதியோர் ஓய்வூதியம், புதிய குடும்ப அட்டை உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளுக்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, மக்கள் தொடர்பு முகாமில் உடனடியாக நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் நிலம் தொடர்பான கோரிக்கைகளுக்கு உரிய விசாரணை நடத்தப்பட்டு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படும். சாலை, தெரு விளக்கு மற்றும் பெரிய உட்கட்டமைப்பு கோரிக்கைகள் அரசின் அனுமதி பெற்று விரைவில் செயல்படுத்தப்படும்.

தகுதியுள்ள பொதுமக்கள் யாரும் அலைக்கழிக்கப்படக் கூடாது என்றும், சான்றிதழ்கள் மற்றும் நலத்திட்ட உதவிகள் உரிய காலத்தில் வழங்க வேண்டுமென்று துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு ஒவ்வொரு குடிமகனுக்கும், குடிமகளுக்கும் அவங்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் அரசாங்கத்திடமிருந்து அவங்க பெற நினைக்கிற அனைத்து திட்டங்களையும், அனைத்து மக்களுக்கும் தகுதியான பயனாளிகளுக்கு சென்று சேர வேண்டும் என்ற நோக்கில் தான் செயல்பட்டு கொண்டிருக்கிறது. அரசுக்கும் மக்களுக்குமான நல்லுறவை உறுதிப்படுத்தி, நாட்டின் சுதந்திர தின நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். என கூறினார்.

நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் வருவாய்த்துறை, மாவட்ட தொழில் மையம், வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, மாவட்ட வழங்கல் துறை, கால்நடை பாரமரிப்பு துறை உள்ளிட்ட துறைகளின் சார்பில் 187 பயனாளிகளுக்கு ரூ.4 இலட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கினார். நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் மு.வேலுமணி துறை அலுவலர்கள், பயனாளிகள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

## திருச்சி மத்திய பேருந்து நிலையம் அருகே மயங்கி விழுந்த வாலிபர் சாவு

திருச்சி ஆக 13

திருச்சி மத்திய பேருந்து நிலையம் அருகே உள்ள டிராவல்ஸ் அருகில் சுமார் 32 வயது மதிக்கத்தக்க அடையாளம் தெரியாத நபர் ஒருவர் மயங்கி விழுந்து கிடப்பதாகக் கிராம நிர்வாக அலுவலர் சரவணனுக்குத் தகவல் கிடைத்தது. இதையடுத்து கண்டோன்மென்ட் போலீசார் விரைந்து சென்று அந்தநபரை திருச்சி அரசு மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். எனினும், அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள் அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாகத் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் குறித்து கண்டோன்மென்ட் காவல் நிலைய ஆய்வாளர் சிவ பிரகாசம் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.




சேலம் மாவட்டம், அயோத்தியாப்பட்டணம் வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம் சார்பில் எம்.தாதனூர் பகுதியில் நடைபெற்று வரும் விவசாயிகளுக்கு அடையாள எண் பதிவு செய்யும் முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.இளம்பகவத், இ.ஆ.ப., அவர்கள் (13.08.2026) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

# ஈரோட்டில் 2,000 பேருக்கு ஆடி அமாவாசை அன்னதானம்



ஈரோடு ஆகஸ்ட் 14 ஈரோடு தாளவாடி தலைமலை தொட்டபுரம் ஸ்ரீ ருத்ர ஜெய வீர ஆஞ்சநேயர் திருக்கோவில் சேவா அறக்கட்டளை மற்றும் ஈரோடு தினசரி காய்கறி சந்தை நண்பர்கள் இணைந்து, கடந்த இரண்டு வருடமாக தங்களதுசேவையைத்தொடர்ந்துள்ளனர்.

ஈரோடு நேதாஜி காய்கறி சந்தையில் தொடர்ந்து இரண்டாவது ஆண்டில், 20வது மாதமாக ஆடி அமாவாசையை முன்னிட்டு மாபெரும் அன்னதானம் நடைபெற்றது. ஆஞ்சநேயர் படத்திற்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு பூஜைகள் நடைபெற்ற பின்பு சிறப்பு பிரம்மாண்ட அன்னதானம் தொடங்கப்பட்டது.

குறிப்பாக ஆடி அமாவாசையை முன்னிட்டு மிளகு சாதம் , எலுமிச்சை பழ சாதம், தக்காளி சாதம், காய்கறி சாதம் போன்ற நான்கு வகையான சாதங்கள் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்விற்கு சிறப்பு அழைப்பாளர்களாக அம்மன் கேலண்டரிங் மில் சுப்பிரமணியம், பூபதி ஆயில் மில் உரிமையாளர் S. A.ஆறுமுகம் ஆகியோர்கள் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு அன்னதானத்தை துவக்கி வைத்தனர்.

நேதாஜி காய்கறி மார்க்கெட் கடை உரிமையாளர்கள், விவசாயிகள், கோவில் அறங்காவலர்கள், அன்னதான கமிட்டியின் நிர்வாகிகள், மகளிர் அணியினர் கலந்து கொண்டு 2000க்கும் மேற்பட்ட குழந்தைகள், பெரியவர்கள், முதியோர்களுக்கு உணவை வழங்கினர்.

இதனைத் தொடர்ந்து, ஸ்ரீ ருத்ர ஜெய வீர ஆஞ்சநேயர் திருக்கோவில் சார்பாக ஈரோடு கொங்கலம்மன் கோவில் வீதியிலும் சுமார் 700 பேருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. மேலும் தலமலை ஆஞ்சநேயர் திருக்கோவிலிலும் அறக்கட்டளை சார்பாக அன்னதானம் வழங்கப்பட்டது.

# அருள்மிகு ஸ்ரீ ராஜகாளியம்மன் கோவில் ஆடி கொடை விழாவை முன்னிட்டு மாபெரும் இரட்டை மாட்டு வண்டி எல்கை பந்தயம்

விளாத்திகுளம் ஆகஸ்ட் 14. தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே உள்ள லெக்கம்பட்டி கிராமத்தில்சுதந்திரப்போராட்டத்திற்காக வீரமுழக்கமிட்ட மாவீரன் அழகுமுத்துக்கோனின் 269வது குருபூஜைவிழா மற்றும் லெக்கம்பட்டி கிராமத்தில் அருள்பாலித்து வரும் அருள்மிகு ஸ்ரீ ராஜகாளியம்மன் கோவில் ஆடி மாத கொடை விழாவை முன்னிட்டு லெக்கம்பட்டி யாதவ சமுதாய மக்கள் சார்பாக மாபெரும் மூன்றாம் ஆண்டு இரட்டை மாட்டு வண்டி எல்கை பந்தயம் நடைபெற்றது. சின்னமாடு, பூஞ்சிட்டு என இரு பிரிவுகளாக நடைபெற்ற இரட்டை மாட்டு வண்டி எல்கை பந்தயத்தில் திருநெல்வேலி,ராமநாதபுரம்,



சிவகங்கை,தூத்துக்குடி,மதுரை உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து சுமார் 28 ஜோடி மாடுகள் போட்டியில் கலந்து கொண்டு இலக்கை நோக்கி சீரிப் பாய்ந்தன, சின்னமாடு போட்டிக்கு போக வர 6 மைல் தூரமும்,பூஞ்சிட்டு மாட்டு வண்டி பந்தயத்திற்கு போக வர 5 மைல் தூரமானது நிர்ணயிக்கப்பட்டு போட்டியானது நடைபெற்றது. போட்டியில் வெற்றி பெற்ற மாட்டின் உரிமையாளர் மற்றும் ஓட்டி வந்த சாரதிகளுக்கு விழா கமிட்டியின் சார்பாக பரிசுத் தொகை மற்றும் வெற்றிக் கோப்பை வழங்கி கவுரவிக்கப்பட்டது. இந்தமாபெரும் மாட்டு வண்டிகள் பந்தயத்தினை விளாத்திகுளம் சட்ட மன்ற உறுப்பினர் மார்கண்டயேன் மற்றும் மதுரைஅதிமுகஅனைத்து உலக எம்ஜிஆர் மன்ற மாநில துணைச்செயலாளர் அன்னபூர்ணா தங்கராஜ் ஆகியோர் கொடியசைத்து தொடங்கி வைத்தனர்.

# மத்திய அரசின் மக்கள் நல்வாழ்வு திட்டங்கள் குறித்து விழிப்புணர்வு



கிருஷ்ணகிரி, ஆக.13: கிருஷ்ணகிரி நகராட்சி டி.பி.ரோட்டில் உள்ள ஸ்ரீ விநாயகா மஹாலில், இந்திய அரசு தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் கீழ் செயல்படும் மத்திய மக்கள் தொடர்பகம் சார்பில், மத்திய அரசின் மக்கள் நல்வாழ்வுத் திட்டங்கள் குறித்த இரண்டு நாள் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இதனை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.தினேஷ்குமார்தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் பேசிய மாவட்ட ஆட்சித்தலைவர், மத்திய, மாநில அரசுகளின் நலத்திட்டங்கள் பயனாளிகளைச் சரியான நேரத்தில் சென்றடைய விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் அவசியம் என்றார்.

பெண் குழந்தையை காப்போம், பெண் குழந்தைக்கு கற்பிப்போம், தூய்மை இந்தியா, மக்கள் வங்கி திட்டம், போதைப் பொருள் ஒழிப்பு பாரத இயக்கம், இல்லந்தோறும் தேசியக் கொடி உள்ளிட்ட திட்டங்கள் குறித்து கண்காட்சி மற்றும் கருத்தரங்குகள் நடைபெற்றன. பல்வேறு அரசு துறைகள் சார்பில் திட்டங்கள் குறித்த பதாகைகள் மற்றும் அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தன.

மேலும், கல்லூரி மாணவர்களுக்கு போதைப்பொருள் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு உறுதிமொழி எடுக்கப்பட்டது. இல்லந்தோறும் தேசியக் கொடி ஏற்றுவோம் திட்டம் குறித்த விழிப்புணர்வு பேரணியும் நடைபெற்றது. மாணவர்களுக்கு பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு, வெற்றி பெற்றவர்களுக்குமாவட்ட ஆட்சியர் பரிசுகளை வழங்கினார். நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர்பா.முகுந்தன்உள்ளிட்ட அரசு அதிகாரிகள், துறை அலுவலர்கள், கல்லூரி மாணவர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகக்கூட்டரங்கில் (13.08.2026) விமான நிலைய சுற்றுச்சூழல் மேலாண்மை குழு கூட்டம் மாவட்ட ஆட்சியர் திரு. விஷு மகாஜன்.இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

# அந்தியூர் பகுதியில் 5 நாட்கள் மதுக்கடைகள் அடைப்பு

ஈரோடு ஆக 14 ஈரோடு மாவட்டம், அந்தியூரில் குருநாத சாமி கோவில்திருவிழா நடக்கிறது.

இதையொட்டி அந்தியூர் பகுதியில் உள்ள மதுபான கடைகள் நேற்று முதல் முதல் வருகிற 16 ந் தேதி வரை 5 நாட்களுக்கு மட்டும் முழுவதுமாக மூடப்பட்டிருக்கும் அன்றைய தினங்களில் மதுபான விற்பனைகள் ஏதும் நடைபெறாது என்றும் இதை மீறி மது விற்பனையில் ஈடுபடும் நபர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் ஈரோடு மாவட்ட ஆட்சியர் கந்தசாமி தெரிவித்து உள்ளார்.



தூத்துக்குடி மாவட்ட நீர்வளத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள பல்வேறு குளங்கள், கால்வாய்கள் மற்றும் அணைக்கட்டு பகுதிகளை மாவட்ட ஆட்சியர் விஷூ மகாஜன் இன்று நேரில் சென்று பார்வையிட்டுப் களஆய்வு மேற்கொண்டார். நாட்டார் குளம், செய்தூங்கநல்லூர் தூதுகுழி குளம், வேள்ளூர் குளம், வெள்ளமடம் தென்கரை குளம், முதலைமொழி குளம் மற்றும் கீழப்புதுக்குளம் கிராமத்தில் உள்ள குளம் ஆகியவற்றை நேரில் ஆய்வு செய்தார். செய்துங்கநல்லூர், கால்வாய் கிராமம் மற்றும் வெள்ளமடம் கிராமங்கள் வழியாகச் செல்லும் மருதூர் மேலக்கால்வாய்/கீழக்கால்வாய் பகுதிகளைப் பார்வையிட்டுத் தூர்வாரும் பணிகள் மற்றும் நீர்வரத்து குறித்து ஆய்வு செய்தார். சுப்பராயபுரம் அணைக்கட்டுப் பகுதியை ஆய்வு செய்த ஆட்சியர், தொடர்ந்து சாத்தான்குளம் கரையடி சுடலைமாடசாமி கோவில் அருகில் ரூ.14 கோடி மதிப்பீட்டில் புதிய தடுப்பணை அமைப்பது தொடர்பாக களஆய்வு மேற்கொண்டார். ஆய்வின் போது நீர்வளத்துறை அதிகாரிகளுடன் உடனிருந்து, நீர்நிலைகளைப் பராமரித்தல் மற்றும் பாசன வசதிகளை மேம்படுத்துதல் தொடர்பான பணிகளை விரைந்து முடிக்க ஆட்சியர் அறிவுறுத்தினார்.

# தருமபுரியில் திமுக தொழிற்சங்கத்தினர் கண்டன ஆர்ப்பாட்டம்



தருமபுரி ஆகஸ்ட் 14 தருமபுரி டாஸ்மாக்கில் திமுக தொழிற்சங்கம் சார்பில் தமிழக அரசு மற்றும் டாஸ்மார்க் நிறுவனத்தை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் தருமபுரி டாஸ்மார்க் மேலாளர் அலுவலகம் அருகில் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழக அரசு மற்றும் டாஸ்மார்க் நிறுவனம் காலி மதுப் பாட்டில்களை திரும்ப பெறும் திட்டத்தால் பணியாளர்களுக்கு கூறுதல் பணி சுமை ஏற்படுவதால் இத்திட்டத்தை கைவிட வேண்டும். ஆன்லைன் மூலம் விற்பனை செய்யும் முயற்சியை கைவிட வேண்டும். டாஸ்மார்க் ஊழியர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும் . மேலும் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆல்பா டத்தில் தொழிற் சங்கத்தைச் சேர்ந்த ஏராளமான தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

# வழிப்பறியை தடுக்க வந்த காவலாளி கொலை: குற்றவாளிகளுக்கு ஆயுள் தண்டனை!



திருவள்ளூர்மாவட்டம் ஆவடி அருகே முத்தால்புதுப்பேட்டை பகுதியில் கடந்த 2020 ஆம் ஆண்டு 2 லாரி ஓட்டுநர்கள் சாலையோரம் லாரியை நிறுத்திவிட்டு உறங்கிக் கொண்டிருந்த போது அங்கு வந்த விஜயகுமார் மற்றும் சுரேஷ் ஆகியோர் லாரி ஓட்டுநரை தாக்கி அவர்களிடம் இருந்த பணம் மற்றும் செல்போனை பறித்துக் கொண்டு தப்பிக்க முயன்ற போது அவர்களை துரத்தி பிடிக்க முயன்ற காவலாளி வெங்கடேசன் என்பவரை இரும்புராடால் தலையில் அடித்து கொலை செய்தனர்

இந்த வழிப்பறி மற்றும் கொலை சம்பவம் குறித்து முத்தாபுதுப்பேட்டை காவல் நிலையத்தில் 392, 397, 302 ஆகிய பிரிவுகளில் வழக்கு பதிவு செய்யப்பட்டு திருவள்ளூர் ஒருங்கிணைந்த நீதிமன்றத்தில் வழக்கானது விசாரணை மேற்கொள்ளப்பட்ட வந்த நிலையில் 6 ஆண்டுகளுக்குப் பிறகு தற்பொழுது திருவள்ளூர் நீதிமன்றம் கொலை சம்பவத்தில் ஈடுபட்ட விஜயகுமார் என்கிற விஜய் மற்றும் சுரேஷ் ஆகியோருக்கு ஆயுள் தண்டனை விதித்ததுடன் 7 ஆண்டு கடுங்காவல் தண்டனையும் 15,000 அபராதமும் விதித்து மாவட்ட அமர்வு நீதிமன்ற நீதிபதி டாக்டர் ஜூலியட் புஷ்பா அதிரடி தீர்ப்பு வழங்கினார்

இந்ததீர்ப்பு குறித்து திருவள்ளூர் மாவட்ட அரசு வழக்கறிஞர் என்ஆர் ஸ்ரீதரன்பாபு கூறுகையில் இது ஒரு மகத்தான தீர்ப்பு எனவும் அரசு எந்தவித பாரபட்சமும் இல்லாமல் இது போன்ற குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்று தருவதில் உறுதியாக உள்ளது எனவும் அதற்காக வழக்கறிஞர்களும் காவல்துறையும் உறுதுணையாக உள்ளதாகவும் தெரிவித்தார்



தருமபுரி அரசு கலைக் கல்லூரி காட்சி வழி தொடர்பியல் துறையின் ஒரு நாள் சிறப்பு வகுப்பு நடைபெற்றது. இதில் இந்திய திரைப்பட இயக்குனர் கணேசன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். மாணவர்களுக்கு திரைப்படம் எடுப்பது எப்படி என்ற தலைப்பில் பயிற்சி வகுப்பினை நடத்தினார். இதில் கல்லூரியில் பொறுப்பு முதல்வர் விஜயா தாமோதரன் தலைமையேற்று வாழ்த்துரை வழங்கினார். துறையின் தலைவர் கோ .பிரபாகரன் வரவேற்புரையாற்றினார். இதில் ஆசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

# மலையம்மை குருசடியில் அன்னதானம்

கன்னியாகுமரி ஆக 14 பொட்டல்குளம் பாலகிருஷ்ணன் நகர் மலையம்மை ஒரு செடியில் கை கொடுக்கும் கரங்கள் அறக்கட்டளை சார்பில் மாபெரும் அன்னதானம் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு ஊர் தலைவர் கணபதி தலைமை தாங்கினார்.

முன்னாள் அரசு வழக்கறிஞர் வக்கீல் பாலகிருஷ்ணன்,முருகன்சுவாமிகள், தொழிலதிபர் செந்தில்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு விருந்தினராக சென்னை தொழிலதிபர் மோகன் கலந்துகொண்டு உபயமாக வழங்கிய அன்னதானத்தை தொடங்கி வைத்தார் இதில் இராஜதுரை பாப்பா செல்வ கிருஷ்ணன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.





திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி காய்கறி சந்தையில் நகராட்சி பொறியாளர் சந்திரசேகரை முற்றுகை. தினந்தோறும் காய்கறி சந்தையில் குப்பைகளை அகற்றுவதில்லைமேலும்சந்தையில்சுற்றித்திரியும்மாடுகளைபிடித்துபறிமுதல்செய்யவேண்டும் என்று பலமுறை புகார் அளித்தும் நடவடிக்கை இல்லை. மேலும் சந்தையில் உள்ள குப்பைகளை ஒப்பந்தக்காரர் எடுக்க வேண்டும் எனவும் அல்லது நகராட்சி ஊழியர்கள் தான் குப்பைகளை எடுக்க வேண்டும் என்றும் இரு தரப்பினர் இடையே கடும் வாக்குவாதம் ஆய்வு செய்ய வந்த பொறியாளர் சந்திரசேகரை காய்கறி வியாபாரிகள் மற்றும் நகர மன்ற உறுப்பினர்கள் முற்றுகையிட்டதால் சந்தையில் பெரும் பரபரப்பு மாவட்ட ஆட்சியர் இதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வியாபாரிகள் கோரிக்கை.

# வங்கி தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பின் சார்பாக 5 நாள் வேலை முறையை அமல்படுத்தக் கோரி போராட்டம்




மதுரை: வங்கி ஊழியர்களுக்கு வாரத்தில் 5 நாட்கள் மட்டுமே வேலை என்ற நடைமுறையை அமல்படுத்த வலியுறுத்தி, வங்கி தொழில் சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் தமிழகம் முழுவதும் போராட்டம் நடைபெற்றது. தமிழ்நாடு முழுவதும் சுமார் 75 இடங்களில் நடைபெற்ற இந்த போராட்டத்தின் ஒரு பகுதியாக, மதுரை தல்லாகுளம் பகுதியில் உள்ள கனரா வங்கி முன்பு வங்கி ஊழியர்கள் மற்றும் தொழிற்சங்க நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதில், வங்கி ஊழியர்களின் நீண்ட நாள் கோரிக்கையான வாரத்தில் 5 நாட்கள் வேலை முறையை விரைவில் அமல்படுத்த வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. வங்கி ஊழியர்களின் பணிச்சுமை, வேலை நேரம் மற்றும் குடும்ப சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு 5 நாள் வேலை முறைக்கு உரிய ஒப்புதல் வழங்க வேண்டும் என போராட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. மேலும், இந்த கோரிக்கையை இந்திய வங்கிகள் கூட்டமைப்பு உரிய முறையில் பரிசீலித்து, வங்கி ஊழியர்களின் நலனை கருத்தில் கொண்டு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என சங்கங்களின் சார்பில் கேட்டுக் கொள்ளப்பட்டது.

தற்போதைய பணிச்சுமைக்கு ஏற்ப வாரத்தில் 5 நாட்கள் வேலை முறையை அமல்படுத்துவது அவசியம் என போராட்டத்தில் பங்கேற்றவர்கள் தெரிவித்தனர். நீண்ட காலமாக வலியுறுத்தப்பட்டு வரும் இந்த கோரிக்கைக்கு உரிய தீர்வு காணப்படாமல் தொடர்ந்து காலதாமதம் செய்யப்பட்டால், அடுத்தகட்டமாக மாநிலம் முழுவதும் மிகப்பெரிய அளவில் போராட்டங்கள் நடத்தப்படும் என வங்கி தொழில் சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

மதுரை போராட்டத்தில் ஸ்டேட் பேங்க் துணைத் தலைவர் சிக்கந்தர் மற்றும் வங்கி தொழிற்சங்க நிர்வாகிகள், ஊழியர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு, 5 நாள் வேலை முறையை உடனடியாக அமல்படுத்த வேண்டும் என கோஷங்களை எழுப்பினர்.



கிருஷ்ணகிரி நகராட்சி, டி.பி.ரோடு, ஸ்ரீ விநாயகா மஹாலில், இந்திய அரசு தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் கீழ் செயல்படும் மத்திய மக்கள் தொடர்பகம் சார்பில் மக்கள் நலத்திட்டங்கள் குறித்து ஒருங்கிணைந்த சிறப்பு விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் கொயடியசைத்து துவக்கி வைத்தார். உடன் மத்திய மக்கள் தொடர்பக உதவி இயக்குநர் . தே.பால நாகேந்திரன், மத்திய மக்கள் தொடர்பு கள விளம்பர உதவி அலுவலர்கள் .மு.தியாகராஜன் (தர்மபுரி), .மு.ஜெயகணேஷ் (வேலூர்), வேளாண் அறிவியல் மைய தலைவர் முனைவர்.தோ. சுந்தர்ராஜ், இந்தியன் வங்கியின் மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் .மோ.சசிகுமார், ஆகியோர் உள்ளனர்.



# நாகர்கோவில் தலைமை தபால் நிலையம் சார்பில் வீடு தோறும் மூவர்ணக் கொடி விழிப்புணர்வு பேரணி

நாகர்கோவில், ஆக.14: மத்திய அரசின் 'ஹர் கர் திரங்கா' இயக்கத்தை முன்னிட்டு, நாகர்கோவில் தலைமை தபால் நிலையம் சார்பில் வீடு தோறும் தேசியக் கொடி ஏற்றுவது குறித்த விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

'ஹர் கர் திரங்கா' இயக்கம் ஆகஸ்ட் 9 முதல் 17ம் தேதி வரை நடைபெற்று வருகிறது. இதையொட்டி கன்னியாகுமரி அஞ்சல் கோட்டத்தில் பல்வேறு விழிப்பு ணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. அனைத்து அஞ்சலகங்களிலும் தேசியக் கொடிகள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. நாகர்கோவில் தலைமை தபால் நிலையத்தில் இருந்து புறப்பட்ட பேரணியை கன்னியாகுமரி அஞ்சல் கோட்ட கண்காணிப்பாளர் வி.தீத்தாரப்பன் மற்றும் முதுநிலை அஞ்சல் அதிகாரி எஸ்.சுரேஷ் ஆகியோர் கொடியசைத்துதொடங்கி வைத்தனர். நான்கு ரதவீதிகள் வழியாகச் சென்ற பேரணி மீண்டும் தலைமை தபால் நிலையத்தை வந்தடைந்தது.

பேரணியில் சுமார் 100 அஞ்சல் துறை ஊழியர்கள், எஸ்.டி. இந்துக் கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் 50க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். பொதுமக்களிடையே தேசபக்தி மற்றும் தேசியக் கொடியின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.



ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், இலக்காபுரம் ஊராட்சி கரட்டாங்காடு பகுதியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்ட தமிழ்நாடு அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்த புகைப்படக்கண்காட்சியினை பொதுமக்கள் ஆர்வத்துடன் நேற்று பார்வையிட்டனர்.

# சக்தி மசாலா நிறுவனம் சார்பில் பெண்களுக்கு சுய சக்தி விருது

ஈரோடு ஆக 13 இல்லத்தரசிகளின் தொழில் முனைவு சாதனைகளை அங்கீகரித்தும் அவர்களை ஊக்குவித்தும் சுய சக்தி மற்றும் ஹோம் பிரெனர் விருதுகள் வழங்கும் விழா சக்தி மசாலா மற்றும் பிராண்ட் அவதார் சார்பில் சென்னையில் நடைபெற்றது. பிராண்ட் அவதார் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி ஹேமச்சந்திரன் தலைமையில் நடந்த இந்த விழாவில் சக்தி மசாலா நிறுவனர் பி சி துரைசாமி இயக்குனர் சாந்தி துரைசாமி ஆகியோர் முன்னிலை வைத்தனர் .



இதில் பள்ளி கல்வித்துறை அமைச்சர் ராஜமோகன், நிதி அமைச்சர் மரிய வில்சன் ஆகியோர்சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டனர். இதில் சௌமியா அன்பு மணி எம். எல். ஏ.உள்பட 3 சுய சக்தி விருதும் ஈரோட்டை சேர்ந்த சௌந்தர்யா லட்சுமி உட்பட 9 பேருக்கு ஹோம்பிரேனர் விருதும் வழங்கப்பட்டது. மேலும் சுயசார்பு மகளிர்களுக்கு பல்வேறு தலைப்புகளின் கீழ் விருதுகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்ச்சியில் பிரவீன் சக்கரவர்த்தி எம். பி. நடிகர் சூரி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# திருவள்ளூர் அடுத்த காக்களூர் பகுதியில் கல்லூரி பேருந்து மோதி எலக்ட்ரீசியன் உயிரிழப்பு

திருவள்ளூர் திருவள்ளூர் அடுத்த காக்களூர் பகுதியில் கல்லூரி பேருந்து மோதியதில் இருசக்கர வாகனத்தில் சென்ற எலக்ட்ரீசியன் ராஜேந்திரன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

காக்களூரைச் சேர்ந்த ராஜேந்திரன், தனது பேரக் குழந்தையை தனியார் பள்ளியில் விட்டுவிட்டு இருசக்கர வாகனத்தில் பணிக்குச் சென்றுள்ளார். காக்களூர் எடை மேடை அருகே சென்றபோது, அதே திசையில் வந்த இந்திரா கல்விக் குழும கல்லூரி பேருந்து, அவரது இருசக்கர வாகனம் மீது மோதியது.



இதில் நிலைதடுமாறி கீழே விழுந்த ராஜேந்திரன் மீது பேருந்தின் பின்புற சக்கரம் ஏறி இறங்கியதில், அவர் பரிதாபமாக உயிரிழந்தார். தகவலறிந்து வந்த உறவினர்கள் கதறி அழுதது சோகத்தை ஏற்படுத்தியது.

திருவள்ளூர் தாலுகா போலீசார் உடலை மீட்டு பிரேதப் பரிசோதனைக்காக அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து, வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்நிலையில், விபத்து நடந்த காட்சிகள் கண்காணிப்பு கேமராவில் பதிவாகி வெளியாகியுள்ளன. பேருந்து இருசக்கர வாகனம் மீது மோதுவதும், ராஜேந்திரன் கீழே விழுந்ததும், அவர் மீது பேருந்தின் பின் சக்கரம் ஏறுவதும் பதிவாகியுள்ளது. இச்சம்பவம் அப்பகுதியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# 10 ஆண்டுகளாக வழிபாடின்றி சிதிலமடையும் கோவில்: கிராம மக்கள் வேதனை!



திருப்பூர், ஆக.14: திருப்பூர் மாவட்டம், தாராபுரம் அருகே அரிக்கன்வலசு கிராமம் மாலமேட்டில் ராஜகம்பளத்து நாயக்கர் சமுதாயத்திற்குச் சொந்தமான அருள்மிகு கார பொம்மு என்கிற கெங்கிசி பால மன்னவார் குலதெய்வக் கோவில் அமைந்துள்ளது. இக்கோவிலில் ஸ்ரீ நாகமுத்து சுவாமி, ஸ்ரீ பொம்மைய சுவாமி, ஸ்ரீ காட்டம்மாள், ஸ்ரீ ஜக்கம்மாள், ஸ்ரீ கன்னிமார் மற்றும் காவல் தெய்வங்கள் உள்ளன.

கோவிலில் ஆண்டு தோறும் பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு வழிபாடுநடத்துவதுவழக்கம். ஆனால், கடந்த 10 ஆண்டுகளாக தனிநபர்களுக்கிடையேயான பிரச்சனை காரணமாக வழிபாடு தடைபட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கோவிலை 57 கிராமங்களைச் சேர்ந்த 5 முதல் 6 வகையறா பங்காளிகள் குலதெய்வமாக வழிபட்டு வருகின்றனர். வழிபாடு தடைப்பட்டதால் திண்டுக்கல் மற்றும் திருப்பூர் மாவட்டங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் குலதெய்வத்தை தரிசிக்க முடியாமல் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

பிரச்சனைக்கு சுமுக தீர்வு காண கிராம மக்கள் முயன்றபோதும், காவல் நிலையத்தில் புகார்கள் அளிக்கப்பட்டு வழிபாட்டிற்கு தடை ஏற்படுத்தப்படுவதாக அவர்கள் தெரிவித்தனர். தனிநபர் பிரச்சனை காரணமாக பொதுமக்கள் மற்றும் குழந்தைகள் கோவிலுக்குச் செல்ல தடை விதிப்பது நியாயமற்றது என்றும் கூறினர். மேலும், நீண்ட காலமாக பராமரிப்பின்றி கோவில் சிதிலமடைந்து வருவதால், வருங்கால சந்ததியினர் தங்களது சமுதாயக் கோவிலின் அடையாளத்தை இழக்கும் நிலை ஏற்படும் என வேதனை தெரிவித்தனர்.

இதையடுத்து, அமைதியான முறையில் குலதெய்வக் கோவிலில் வழிபாடு செய்ய உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி, திண்டுக்கல் மற்றும் திருப்பூர் மாவட்டங்களைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்டோர் திருப்பூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் மனு அளித்தனர்.


# திருச்சியில் ரயிலில் அடிபட்டு 50 வயது மதிக்கதக்க ஆண் ஒருவர் இறப்பு



திருச்சி ஆகஸ்ட் 13: திருவெறும்பூர் ரயில் நிலையத்திற்கும், தொண்டமான் பட்டி ரயில் நிலையத்திற்கும் இடையே இடையே சுமார் 50 வயது மதிக்கத்தக்க ஆண்நபர் ஏதோ ஒரு ரயில் வண்டியில் அடிபட்டு அழுகிய நிலையில் கிடந்துள்ளார்.

சம்பவ இடத்திற்கு திருச்சி ரயில் நிலைய வட்ட காவல் ஆய்வாளர் நேரில் சென்று பிரேதத்தை கைப்பற்றி திருச்சி அரசு பொது மருத்துவமனைக்கு அனுப்பி வழக்கு பதிந்து விசாரணை செய்து வருகின்றனர்.

# காவேரி மருத்துவமனை 5ஜி ஆம்புலன்ஸ் சேவை தொடக்கம்




சென்னை, ஆகஸ்ட் 14, காவேரி மருத்துவமனை நோயாளிகளைத்தொடர்ந்து கண்காணிக்கும் வசதி கொண்ட 5ஜி ஆம்புலன்ஸ் சேவையை சென்னையில் அறிமுகப்படுத்தியுள்ளது.

இச்சேவையை சென்னை பெருநகர காவல் ஆணையரும், காவல் துறையின் கூடுதல் தலைமை இயக்குநருமான ஏ.அமல்ராஜ் தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் காவேரி மருத்துவமனை குழுமத்தின் நிறுவனர் மற்றும் நிர்வாக இயக்குநர் டாக்டர். மணிவண்ணன் செல்வராஜ் முன்னிலை வகித்தார்

இச்சேவையின் மூலம் நோயாளியை மருத்துவமனைக்கு அழைத்து வரும் வழியிலேயே, மருத்துவமனையில் உள்ள சிறப்பு மருத்துவர்கள் நோயாளியின் உடல்நிலையை உடனுக்குடன் கண்காணித்து, ஆம்புலன்ஸில் உள்ள மருத்துவக் குழுவினருக்கு நோயாளிக்கு வழங்க வேண்டிய அவசர சிகிச்சை குறித்து ஆலோசனைகளை வழங்கி அவர்களை வழிநடத்த முடியும்.

ஆழ்வார்பேட்டை, வடபழனி, ரேடியல் சாலை மற்றும் மா காவேரி ரேடியல் சாலை ஆகிய இடங்களில் இயங்கி வரும் காவேரி குழுமத்தின் மருத்துவமனைகளில் 30க்கும் மேற்பட்ட இந்த நவீன ஆம்புலன்ஸ்கள் இயக்கப்படுகின்றன.

மேலும் விரைவான சேவையை வழங்குவதற்காக சென்னையின் பல்வேறு இடங்களில் இந்த ஆம்புலன்ஸ்கள் நிறுத்தப்படும். மக்கள் தொகை, போக்குவரத்து நெரிசல் மற்றும் விபத்துகள் அதிகம் நடக்கும் பகுதிகளைக் கருத்தில் கொண்டு இந்த இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இந்நிகழ்வில் பேசிய சென்னை மாநகர காவல் ஆணையர் அமல்ராஜ், "சென்னை போன்ற பெருநகரங்களில் மருத்துவ அவசர நிலைகளின் போது மிக துரிதமாக செயல்பட்டு நோயாளி மருத்துவமனைக்கு வரும் முன்பே அந்நபருக்கு தேவையான முதலுதவி சிகிச்சையை வழங்குவது அவசியம். நிகழ் நேர கண்காணிப்பு, மருத்துவ நிபுணத்துவம் மற்றும் சிறப்பான ஒருங்கிணைப்புடன் செயல்படும் இதுபோன்ற முன்னெடுப்புகள் ஒட்டுமொத்த அவசர சிகிச்சை அமைப்பை வலுப்படுத்துவதோடு பொதுமக்களுக்கு மிகவும் நம்பகமான சேவையாக இருக்கும்," என்று கூறினார்.

மருத்துவமனையின்நிர்வாக இயக்குநர் டாக்டர். மணிவண்ணன் செல்வராஜ் கூறுகையில், "அவசர சிகிச்சையில், ஆம்புலன்ஸ் பணியாளர்களும் மருத்துவமனை நிபுணர்களும் ஒருங்கிணைந்து விரைவாக செயல்படுவது நோயாளிகளின் உயிர்களைக் காக்க மிகவும் அவசியம். இந்த 5ஜி ஆம்புலன்ஸ் சேவை மூலம், எங்களது மருத்துவக் குழுவினர் ஆரம்பத்திலிருந்தே தேவையான ஆலோசனைகளை ஆம்புலன்ஸ் பணியாளர்களுக்கு வழங்கி, நோயாளி மருத்துவமனைக்கு வந்து சேர்வதற்கு முன்பே உரிய சிகிச்சையை உறுதி செய்கின்றனர்," என்றார். இந்த ஆம்புலன்ஸ் சேவையைப் பெற 044 4000 6000 என்ற 24x7 அவசர உதவி எண்ணையோ அல்லது ஆண்ட்ராய்டு மற்றும் ஐஓஎஸ் தளங்களில் கிடைக்கும் 'காவேரி கேர்' செயலியையோ தொடர்பு கொள்ளலாம்.



வேலூர்மாவட்டஆட்சித்தலைவர்.பி.எஸ்.லீலாஅலெக்ஸ், இ.ஆ.ப., அவர்கள் அணைக்கட்டு தாலுக்கா, கணியம்பாடி ஊராட்சி ஒன்றியம், துத்திக்காடு ஊராட்சி தெள்ளை கிராமத்தில் உள்ள அரசு பழங்குடியினர் நல உண்டு உறைவிட தொடக்கப்பள்ளியை பார்வையிட்டு ஆய்வு செய்து மாணவர்களின் கற்றல் திறனைக் கேட்டறிந்தார். இந்த ஆய்வின் போது உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) .திருமால், வேலூர் வட்டாட்சியர் .பழனி மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் . செல்வி ஆகியோர் உடனிருந்தனர்.

# கிருஷ்ணகிரி ரெட் கிராஸ் மாவட்ட கிளை அலுவலகத்தில், ஹாம் ரேடியோ மையத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் திறந்து வைத்தார்

கிருஷ்ணகிரிரெட்கிராஸ் மாவட்ட கிளை அலுவலகத்தில், ஹாம் ரேடியோ (Ham Radio) மையத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ்குமார் திறந்து வைத்தார். கிருஷ்ணகிரி ஆகஸ்ட் 14: கிருஷ்ணகிரி ரெட் கிராஸ் மாவட்ட கிளை அலுவலகத்தில், ஆகஸ்ட் 12, 2026, ஜெனிவா ஒப்பந்த நாளை முன்னிட்டு, இந்தியன் ரெட் கிராஸ் சார்பாக, ஹாம் ரேடியோ (Ham Radio) மையத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.தினேஷ் குமார் 12.08.2026 அன்று திறந்து வைத்து கல்லூரி மாணவர்கள் முன்னிலையில் உரையாற்றினார். அப்போது அவர் பேசும்பொழுது, பேரிடர் காலங்க காலங்களில் உடனடியாக பாதிப்படைவது தொலைத்தொடர்பு துண்டிப்புதான் இதுபோன்ற பேரிடர் காலங்களில் உடனடியாக தகவல் தொடர்பு பெறுவதற்குஹாம்ரேடியோ (Ham Radio) மிக முக்கிய பங்காற்றுகிறது.ஹாம்ரேடியோ (Ham Radio) பொறுத்துவரை அதற்கு மின்சாரம், நெட்வொர்க் இன்ஃப்ராஸ்ட்ரக்சர் தேவையில்லை. ஹாம் ரேடியோ நாம பேசுவதை ரேடியோ அலையாக (Radio Wave) மாற்றி, அதை அயனோஸ்பியர் (Ionosphere) வரைக்கும் அனுப்ப செய்து, மறுபடியும் ஹாம் ரேடியோவில் உள்வாங்கி நமக்கு எளிதில் புரியும் படியாக துள்ளிமாக தகவல் தெரிவிக்கும். மேலும்,




அனைவராலும் ஹாம் ரேடியோ இயக்க முடியாது. ஏன் என்றால் ஹாம் ரேடியோ இயக்குவதற்கு லைசென்ஸ் பெற்றிருக்க வேண்டும், ஹாம் ரேடியோவிற்கு என்று ஒரு கால் சைன் (Call Sign) இருக்கின்றது. இதுபோன்ற ஹாம் ரேடியோ கிருஷ்ணகிரி மாவ ட்டத்திற்கு தேவையை கருத்தில் இம்மையம் அமைக்கப்பட்டுள்ளது.. தொடர்ந்து வட்ட அளவில் இம்மையம் அமைக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். ரெட் கிராஸ் அலுவலகத்தில் அமெச்சூர் ரேடியோ, அவசர கால தகவல் தொடர்பு அலுவலகம் மற்றும் பயிற்சி மையம் இன்று துவக்கப்ப ட்டுள்ளது. பேரிடர்கள் மற்றும் பிற அவசர கால சூழ்நிலை களில் தகவல் தொடர்பை வலுப்படுத்தவும் திறம்பட தகவல் பரிமாற்றம் மேற்கொள்ளவும் இம்மையம் நிறுவப்பட்டுள்ளது. இதனால் மாவட்டம் முழுவதும் பேரிடர் காலங்களில் மாவட்ட நிர்வாகத்துடன் உடனடியாக தகவல் தொடர்பு ஏற்படுத்தி மீட்பு பணிகள் உடனடியாக மேற்கொள்ள முடியும். நமது மாவட்டத்தில் ரெட் கிராஸ் மூலம் பல்வேறு பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இம்மையம் அமைக்க ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார். தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ரூ.1000 நன்கொடை செலுத்தி கிராஸ் சங்கத்தில் வாழ்நாள் உறுப்பினராக இந்தியன் ரெட் கிராசில் தன்னை இணைத்துக் கொண்டார். இந்நிகழ்ச்சியில் உதவி ஆட்சியர் (பயிற்சி) சாய்சைதன்யா ஜாதவ், ரெட் கிராஸ் ஹாம் ரேடியோ க்ளப் இயக்குநர் பொறி.மனோகரன், கப்பல் பொறியாளர் நீலகண்டன், வட்டாட்சியர் ராஜலட்சுமி, தீயணைப்பு அலுவலர் அந்தோணி சாமி, இந்தியன் ரெட் கிராஸ் நிர்வாகிகள் செந்தில் குமார், மோகன், மனோரா ரெட் கிராஸ் ஹாம் ரேடியோக்ளப்தலைவர் செல்வம், துணை தலைவர் கண்ணன் மற்றும் பிஎஸ்வி தொழில்நுட்ப கல்லூரி, பொருமாள் மணிமேகலை தொழில்நுட்ப கல்லூரிகளைசேர்ந்தமாணவர்கள் கலந்துக்கொண்டனர்.

# வடசேரி பஸ் நிலையத்தில் 150 கண்காணிப்பு கேமராக்கள் செயல்பட தொடங்கியது; மாவட்டத்தில் திருட்டு சம்பவங்கள் குறைந்ததாக போலீஸ் சூப்பிரண்டு பேட்டி

நாகர்கோவில், ஆக.14 குமரி மாவட்டத்தில் பிரதான பஸ் நிலையமான வடசேரி கிறிஸ்டோபர் பஸ் நிலையத்தில் இருந்து தமிழகம் மட்டுமின்றி பிற மாநிலங்களுக்கும் பல்வேறு அரசு பஸ்கள் இயக்கப்பட்டு வருகின்றன. இந்த பஸ் நிலையத்தில் திருட்டு உள்ளிட்ட சமூக விரோத செயல்களை தடுக்கும் வகையில் அதிரடிப்படை போலீசார் கண்காணித்து வருகிறார்கள். ஏற்கனவே அமைக்கப்பட்ட கண்காணிப்பு கேமராக்கள் செயல் இழந்த நிலையில் கிடந்தன இதையடுத்து எஸ் பி ஸ்டாலின் உத்தரவின் பேரில் பழுதான கேமராக்கள் மாற்றப்பட்டு புதிதாக கேமரா பொருத்தும் பணிகள் நடந்தது. வடசேரி பஸ் நிலையம், ஆம்னி பஸ் நிலையம் ஆகிய இரண்டு பஸ் நிலையங்களையும் சுற்றி புதிதாக 150 இடங்களில் கேமராக்கள் வைக்கப்படும் பணிகள் நடந்தன. மேலும் இந்த 150 கேமராக்களை ஒருங்கிணைத்து கட்டுப்பாடு அறை வடசேரி பஸ் நிலைய புறக்காவல் நிலையத்தில் அமைக்கப்பட்டது .

இந்த நிலையில் நேற்று காலை கட்டுப்பாடு அறை செயல்பாடுகளை மாவட்ட எஸ்பி ஸ்டாலின் துவக்கி வைத்தார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது: குற்றங்கள் நடந்த பிறகு அவற்றை கண்டறிவதை விட குற்றங்கள் நடைபெறாமல் தடுப்பதற்கு குமரி மாவட்ட காவல்துறை அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. இதன் மூலமாக குற்றம் இல்லாத ஒரு மாவட்டமாக குமரி மாறி வருகிறது. அதுமட்டுமில்லாமல் கண்காணிப்பு கேமராவுடன் இணைந்த பொது அறிவு அமைப்பு நிறுவப் பட்டுள்ளது. இதன் மூலமாக பஸ் நிலையத்தை கண்காணிப்பு கேமரா மூலம் கண்காணித்து மக்களுக்கு விழிப்பு ஏற்படுவது மட்டுமல்லாமல் குற்றவாளிகள் அல்லது பழைய குற்றவாளிகளாக இருந்தால் அவர்களை எளிதாக கண்டறிய முடியும்.

குமரியில் கிட்டத்தட்ட 98 சதவீதம் கிராமங்களில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளது. விடுபட்டுள்ள 2 சதவீத கிராமங்களிலும் வருங்காலங்களில் கேமராக்கள் நிறுவுவதற்கான போதுமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். அடுத்த கட்டமாக ஒவ்வொரு பஸ் நிலையத்தையும் கண்காணிப்பு கேமராவுடன் இணைப்போம்.



தற்போது தக்கலையில் கேமராக்கள் பொருத்தி வருகிறோம். நாளை 15ம் தேதி முதல் இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்து செல்பவர்களும் ஹெல்மெட் அணிய வேண்டும். குமரி மாவட்டத்தில் திருட்டுகள் குறைந்து இருக்கின்றன. பஸ்களில் திருட்டு நடைபெறுகிறது. அதனை தடுப்பதற்கு பஸ் நிலையங்களில் கவனம் செலுத்த பட்டு வருகிறது. எனக் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் ஏடிஎஸ்பி கலையரசன், பாலசுப்பிரமணியன், டிஎஸ்பிக்கள் இளஞ்செழியன், பார்த்திபன், சங்கர் கணேஷ், காந்தி, பிரகாஷ், வடசேரி இன்ஸ்பெக்டர் மோகன ஐயர், போக்குவரத்து இன்ஸ்பெக்டர் அருண் உள்ளிட்ட போலீஸ் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.,



ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியர் ச. கந்தசாமி நேற்று ஆய்வு மேற்கொண்டார்.

# கொடிசியாவில் எலக்ட்ரோடெக் 2026 கண்காட்சி




கோவை ஆக:14 கோவை ஒசூர்சாலையில் உள்ள கொடிசியா அலுவலகத்தில் செய்தியாளர் சந்திப்பு நடைபெற்றது .இதில் இந்தியாவில் நடைபெறும் மின்னியல் மற்றும் தொழில் மின்னணுவியல் துறை சார்ந்து நடைபெறும் பெரும் வர்த்தக கண்காட்சிகளில் ஒன்றாகும்.எலக்ட்ரோடெக் வரிசையில் நடைபெறும் இந்த கண்காட்சி 8வது பதிப்பாகும்.இந்த கண்காட்சி உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள் மற்றும் மின்னியியல் மற்றும் தொழில் மின்னணுவியல் துறை சார்ந்த பார்வையாளர்கள் மனதில் தனித்த இடம் பெற்றதாகும்.

நாடுமுழுவதில்இருந்து பங்கேற்பாளர்கள் எதிர்பார்க்கும் ஒரு கண்காட்சியாக இது மாறிவருகிறது. இந்த ஆண்டு பார்வையாளர்களுக்கு பயன் அளிக்கும் வகையில் கண்காட்சியாளர்கள் தங்களுடைய நவீன உற்பத்தி பொருட்களை காட்சிப்படுத்த உள்ளார்கள்.மின்னியல் மற்றும் தொழில் மின்னணுவியல் துறையோடு நிலைத்த புதுப்பித்தக்க ஆற்றல்,சூரியஒளிஆற்றல்,ரோபோடிக்ஸ் ,செயற்கை நுண்ணறிவு, மின்சார வாகனங்கள் மற்றும் அவை சார்ந்த துறைகளுக்கு சிறப்பு கவனம் அளிக்கப்பட்டுள்ளது.

இந்த கண்காட்சியில் பங்கேற்கும் மாநிலங்கள் (14)வங்காளம் தமிழ்நாடு, தெலுங்கானா, கர்நாடகா, கேரளா, மகாராஷ்டிரா, கோவா, குஜராத், ராஜஸ்தான், மத்திய பிரதேசம், டில்லி, ஹரியானா, உத்திரபிரதேசம் உத்ரகாண்ட் மற்றும் மேற்கு வங்காளம். மேலும் கண்காட்சி நேரம்,காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை,நுழைவு கட்டணம் ரூ100/(பொதுப் பார்வையாளர்களுக்கு)மாணவர்கள் 24.08.2026 மதியம் 2 மணிக்கு மேல் அனுமதிக்கப்படுவர்என்று தெரிவித்தனர்.

இந்த கண்காட்சியானது,ஏராளாமான எண்ணிக்கையில் மின்னியல் மற்றும் தொழில் மின்னணுவியல் துறை சார்ந்த பொருட்கள் காட்சிப்படுத்தப்படுவதுடன்,அந்த துறைசார்ந்த புதிய தொழில்நுட்பங்கள்,புத்தாக்க முயற்சிகள் மற்றும் தேவையான தீர்வுகளை பற்றி தெளிவாக அறிந்து கொள்ள உதவும் என்று தெரிவித்தனர்.

# குமரியில் சுதந்திர தின விழா கொண்டாட்டம் : ரயில் நிலையங்கள், பஸ் நிலையங்களில் தீவிர கண்காணிப்பு; பாதுகாப்பு பணியில் 1000 போலீசார்

நாகர்கோவில், ஆக. 14 இந்திய சுதந்திர தின விழா நாளை 15ஆம் தேதி கொண்டாடப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்ட நிர்வாகம் சார்பில் சுதந்திர தின விழா நிகழ்ச்சியில் நாகர்கோவில் அண்ணா விளையாட்டு அரங்கில் நடைபெறுகிறது. நாளை காலை 8 மணிக்கு மாவட்ட கலெக்டர் பிரதாப் தேசிய கொடியை ஏற்றுகிறார். இதனை தொடர்ந்து காவல் துறை மற்றும் என்சிசி மாணவ மாணவிகளின் அணிவிப்பு நடக்கிறது. அதனை பார்வையிடும் கலெக்டர் பிரதாப் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார். பின்னர் பள்ளி மாணவ மாணவிகளின் கண்கவர் கலை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.சுதந்திர தின விழாவில் அணிவகுப்பு நடத்தும் காவல்துறையினரின் இறுதி கட்ட ஒத்திகை நிகழ்ச்சி நாகர்கோவில் அண்ணா விளையாட்டு அரங்கத்தில் நேற்று நடைபெற்றது. இதில் பெண் மற்றும் ஆண் காவலர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். சுதந்திர தினத்தை முன்னிட்டு குமரி மாவட்டத்தில் பலத்த போலீஸ் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு ஸ்டாலின் தலைமையில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

மாவட்ட எல்லை பகுதிகளான ஆரல்வாய்மொழி, அஞ்சுகிராமம், களியக்காவிளை, கொல்லங்கோடு ஆகிய இடங்களில் உள்ள சோதனைச் சாவடிகளில் போலீசார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர். அங்கு வழக்கத்தை விட கூடுதல் போலீசரம் நியமிக்கப்பட்டு வெளியூரில் இருந்து வரும் வாகனங்கள் முழுமையாக தணிக்கை செய்யப்படுகின்றன. அதுமட்டுமின்றி கன்னியாகுமரி முதல் நீரோடி வரையிலான கடற்கரை கிராமங்களிலும் கூடுதல் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது . கன்னியாகுமரி கடல் நடுவில் உள்ள திருவள்ளுவர் சிலை மற்றும் விவேகானந்தர்மண்டபத்தில்துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. குமரி கடல் பகுதியில் கடலோர காவல் படை போலீசார் தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டுள்ளனர்.மேலும் மாவட்ட முழுவதும் முக்கியமான இடங்களில் போலீஸ் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். மேலும் கன்னியாகுமரி, வள்ளியூர், குழித்துறை, நாங்குநேரி, இரணியல் ரயில் நிலையங்களிலும் கண்காணிப்பு பணிகள் தீவிர படுத்தப்பட்டுள்ளது. கோவில்கள் உள்ளிட்ட வழிபாட்டு தலங்களிலும்போலீஸ்பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

# நெல், கரும்புக்கான ஊக்கத்தொகை உயர்வு: அமைச்சர் கு.ஜெகதீஸ்வரியிடம் விவசாயிகள் நன்றி



விருதுநகர்

நெல் மற்றும் கரும்புக்கான மாநில அரசின் ஊக்கத்தொகையை உயர்த்தி அறிவித்ததற்காக, தமிழக முதலமைச்சர் ச. ஜோசப் விஜய்க்கு விருதுநகர் மாவட்ட விவசாயிகள் நன்றி தெரிவித்தனர்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி எண் 110ன் கீழ், நெல் மற்றும் கரும்புக்கான மாநில அரசின் ஊக்கத் தொகையை உயர்த்தி முதலமைச்சர் அறிவித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.அதன்படி, வரும் செப்டம்பர் 1ம் தேதி தொடங்கும் நெல் கொள்முதல் பருவத்தில், குறைந்தபட்ச ஆதரவு விலையுடன் மாநில அரசின் ஊக்கத்தொகையாக சன்ன ரக நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ.289, பொது ரக நெல்லுக்கு ரூ.159 வழங்கப்படுகிறது. இதன்மூலம் சன்ன ரக நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ.2,750ம், பொது ரக நெல்லுக்கு ரூ.2,600ம் கிடைக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல், 202526 கரும்பு அரவைப் பருவத்தில், மத்திய அரசு நிர்ணயித்த டன்னுக்கு ரூ.3,290.50க்கு மேல், தமிழக அரசின் சிறப்பு ஊக்கத்தொகையாக ரூ.709.50 வழங்கப்படுவதால், விவசாயிகளுக்கு டன்னுக்கு ரூ.4,000 கிடைக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிவிப்புக்கு நன்றி தெரிவித்து, விருதுநகர் மாவட்ட விவசாயிகள் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கு.ஜெகதீஸ்வரியை சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

# ஸ்ரீ சைதன்யா டெக்னோ பள்ளியின் இளம் தலைவர்களுக்கான பதவியேற்பு விழா




கிருஷ்ணகிரி சென்னை தேசிய நெடுஞ்சாலை திருவண்ணாமலை கூட்டு ரோடு அருகில் அமைந்துள்ளஸ்ரீசைதன்யா டெக்னோ பள்ளியில் மாணவர்களிடம் தனித்துவம், ஒழுக்கம் மற்றும் பொறுப்புணர்வை வளர்க்கும் விதமாக Spartans, Samurais, Knights, Vikings போன்ற நான்கு குழுக்கள் அமைக்கப்பட்டு, அவற்றின் கீழ் பள்ளி மாணவர் பேரவைத் தேர்தல் நடைபெற்றது.

இதன் முன்னதாக மாணவர்களை இந்த நான்கு குழுக்களின் கீழ் பிரித்து தேர்தல் நடைபெற்றது. பள்ளியின் மாணாக்கர் தலைவர், பள்ளியின் மாணாக்கர் தலைவி, துணை மாணாக்கர் தலைவர், துணை மாணாக்கர் தலைவி, இணை செயல்பாட்டு தலைவி, விளையாட்டுத்துறைத் தலைவர், Spartans குழு தலைவர், துணைத் தலைவி, Knights குழு தலைவர், துணைத் தலைவி, Vikings குழு தலைவர், துணைத் தலைவி, Samurais குழு தலைவர், துணைத் தலைவி ஆகியோரை தேர்தல் மூலம் வாக்களித்து வெற்றியாளர்களை தேர்வு செய்து அறிவித்தனர்.தேர்வு செய்த வெற்றியாளர்களுக்குப் பதவியேற்பு விழா சிறப்பாக நடைபெற்றது. இந்த விழாவில் சிறப்பு அழைப்பாளராக கிருஷ்ணகிரி காவல் நிலையத்தில் பணிபுரியும் சிங்கப் பெண் சிறப்பு படை உதவி ஆய்வாளர் திருமதி ரம்யா தலைமை காவலர், திருமதி ராஜேஸ்வரி ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களின் ஒழுக்கம், தனித்துவம் மற்றும் பொறுப்புணர்வு வளர்க்கும் நோக்கில் உரையாற்றி மாணவர்களுக்கு பதவிப்பிரமாணம் செய்து வைத்தனர். மேலும் விழாவில் துணை மேலாளர் ராஜேஷ் பாபு, பள்ளி முதல்வர் திருமதி மேரி அனிடா , மண்டல கல்வி நிலைய தலைவர் பரந்தாமன், துணை முதல்வர்திருமதி கலைவாணி, கல்வி நிலைய தலைவர் முனிவேலன்,சி பிரிவு பொறுப்பாளர் ஜோசப் உள்ளிட்ட அனைவரும் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# வள்ளலார் ஸ்ரீ ஆனைகுண்டு முனீஸ்வரர் ஆலயத்தில் கன்னியம்மன் ஆலய 51வது ஆண்டு திருவிழா



வேலூர், ஆக 14 வேலூர் மாநகரம் சத்துவாச்சாரி அடுத்த வள்ளலார் பகுதி 1 சுதந்திரப் பொன் விழா நகரில் அமைந்துள்ள ஸ்ரீ ஆனைகுண்டு முனீஸ்வரர் ஆலயத்தில் அருள்மிகு அன்னதான மாரியம்மன் மற்றும் கன்னியம்மன் ஆலய 51வது ஆண்டு திருவிழா நடைபெற்றது. முன்னதாக பால்குடம் ஊர்வலம் புறப்பட்டு ஆலயத்தை அடைந்து பாலாபிஷேகம் நடைபெற்றது.பின்னர் அம்மனுக்கு அலங்காரம் ஆராதனை செய்து பூஜை மற்றும் கூழ்வார்த்தல் நடைபெற்றது. இவ்விழாவில் கலந்து கொண்ட அனைத்து பக்தர்களுக்கும் அறுசுவை விருந்து அன்னதானம் ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் ஏராளமான பொதுமக்களும் பக்தர்களும் கலந்து கொண்டு ஆணை குண்டு முனீஸ்வரர் அருளை பெற்றுச் சென்றனர்.

கோவில் நிர்வாகிகள் ஏ . பெருமாள் சி.சுப்பிரமணி ஏ.சண்முகம் சி.ராமசாமி பி.ஏழுமலை எம்.கோபி ஆகியோர்விழாஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தனர்

# வந்தவாசியில் வீட்டிற்குள் வழி மாறி நுழைந்த ராஜாளிப் பறவை பத்திரமாக மீட்பு வனத்துறையிடம் ஒப்படைப்பு

திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசியில், காட்டுப்பகுதியில் இருந்து வழி தவறி குடியிருப்புப் பகுதிக்குள் நுழைந்த அரிய வகை ராஜாளிப் பறவையை, தீயணைப்புத் துறையினர் நீண்ட நேரம் போராடி உயிருடன் மீட்டு வனத்துறையினரிடம் ஒப்படைத்தனர் . ஜன்னலில் தவித்த பறவைகள் வந்தவாசி பாலன் தியேட்டர் அருகில் வசிக்கும் பாரத் என்பவரது வீட்டிற்குள், காட்டுப் பகுதியிலிருந்து பறந்து வந்த இரண்டு ராஜாளிப் பறவைகள் திடீரென நுழைந்தன. வீட்டின் ஜன்னல் ஓரத்தில் சிக்கிக்கொண்ட அந்தப் பறவைகள், வெளியேற வழியின்றி இங்கும் அங்கும் தவித்தபடி பறந்தன. சிறிது நேரத்திற்குப் பின், அச்சத்தில் ஒரு பறவை அங்கிருந்து எப்படியோ பறந்து சென்றுவிட்டது. ஆனால், மற்றொரு ராஜாளிப் பறவை ஜன்னலிலேயே தங்கி வெளியேற முடியாமல் சிக்கிக்கொண்டது . தீயணைப்புத் துறையினர் சாதனை மீட்பு இதைக் கண்டு அதிர்ச்சியடைந்த வீட்டு உரிமையாளர் உடனடியாக வந்தவாசி தீயணைப்பு நிலையத்திற்குத் தகவல் தெரிவித்தார். தகவலின் பேரில் விரைந்து வந்த தீயணைப்புத் துறை வீரர்கள், மிகுந்த எச்சரிக்கையுடன் செயல்பட்டு ஜன்னலில் சிக்கியிருந்த ராஜாளிப் பறவையை சுமார் அரை மணி நேரப் போராட்டத்திற்குப் பிறகு பத்திரமாக உயிருடன் மீட்டு வெளியே கொண்டுவந்தனர்.பின்னர், அந்த வன விலங்கு பறவை இனத்தை உரிய முறையில் பாதுகாப்பதற்காக வந்தவாசி வனத்துறையினரிடம் தீயணைப்பு வீரர்கள் ஒப்படைத்தனர். குடியிருப்புப் பகுதிக்குள் வனப்பகுதிப் பறவை நுழைந்து மீட்கப்பட்ட இந்தச் சம்பவம் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பை ஏற்படுத்தியது.

# நாகர்கோவில் ரயில் நிலையத்தில் 4 ரயில்களில் கடத்தி வரப்பட்ட 26 கிலோ குட்கா பறிமுதல்




நாகர்கோவில், ஆக.14 தமிழகம் முழுவதும் ரயில்களில் குட்கா கஞ்சா புகையிலை கடத்த கடத்தலை தடுக்க காவல்துறையினர் பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதன் ஒரு பகுதியாக நேற்று முன்தினம் முதல் ரயில்வே காவல்துறையினர் அதிரடி சோதனையில் ஈடுபட்டுள்ளனர். குமரி மாவட்டத்தில் குழித்துறை, நாகர்கோவில் ரயில்வே காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் கண்காணிப்பு பணிகளை மேற்கொள்ள தனிப்படைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு நிலையத்திற்கும் இரண்டு தனிப்படைகள் என மொத்தம் நான்கு தனிப்படைகள் அமைக்கப்பட்டு ரயில்களில் தீவிர சோதனை நடத்தப்பட்டு வருகிறது .

இந்த நிலையில் நிஜாமுதீனில் இருந்து கன்னியாகுமரி வந்த எக்ஸ்பிரஸ் ரயில் நேற்று முன்தினம் இரவுதனிப்படை போலீசார் சோதனை நடத்தினர். அப்போது முன்பதிவு செய்யப்படாத பெட்டியில் கேட்பார் இன்றி ஒரு பேக் கிடந்தது. அந்த பேக்கை எடுத்த போலீஸ் சோதனை இட்டபோது, அதில் குட்கா புகையிலை இருந்தது. பின்னர் அந்த பேக் கை போலீசார் சேர்ந்து சோதனை செய்த போது, அதில் 20 கிலோ குட்கா புகையிலை இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதனை யார் கடத்தி வந்தார்கள்? என்பது தெரியவில்லை. புகையிலை கடத்தி வந்தது யார்? என போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

அதைத்தொடர்ந்து நேற்று காலையில் போலீசார் சோதனையில் ஈடுபட்ட போது பிகாரில் இருந்து கன்னியாகுமரி வந்த ரயிலில் ரயிலில் முன்பதிவு செய்யப்படாத பெட்டியில் அனாதையாக இருந்த பேகை கைப்பற்றி சோதனை செய்தனர். சோதனையில் பேக்கில் ஐந்து கிலோ குட்காபுகையிலை இருப்பது தெரிய வந்தது.

தொடர்ந்து நாகர்கோவில் வந்த சூப்பர் பாஸ்ட் எக்ஸ்பிரஸ் ரயிலில் சோதனை செய்தனர் அதில் ஒரு கிலோ குட்கா புகையிலை சிக்கியது. மேலும் பெங்களூர் எக்ஸ்பிரஸ்ரயிலில்அரைகிலோ குட்கா சிக்கியது. போலீசாரின் இந்த அதிரடி சோதனையில் இதுவரைமொத்தம் 26 அரை கிலோ குட்கா புகையிலை சிக்குண்டதுடன் சோதனை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. குறிப்பாக வட மாநிலங்களில் இருந்து வரும் ரயில்களில் போலீசார் தீவிர சோதனை மேற்கொண்டு வருகின்றனர்.

# பஜாஜ் ஆட்டோ பல்சர் என் வகைப்பிரிவில் மேலும் புதிய இரண்டு மாடல்கள் அறிமுகம்



சென்னை, ஆகஸ்ட்14, இரு மற்றும் மூன்று சக்கர வாகனஉற்பத்தியாளரான பஜாஜ் ஆட்டோ லிமிடெட், பல்சர் என் 160 வகைப்பிரிவை விரிவுபடுத்தும் வகையில், புத்தம் புதிய பல்சர் என் 160 எஸ், மற்றும் என் 160 எஸ் எஸ் மாடல்களை அறிமுகப்படுத்துகிறது

மேற்குறிப்பிட்ட மாடல்கள் பஜாஜ் ஆட்டோடீலர்ஷிப்களில் முறையே ரூ. 1,33,511 மற்றும் ரூ. 1,42,585 (டெல்லி எக்ஸ்ஷோரூம் விலை) விலையில் கிடைக்கின்றன.

மேலும் 160 சிசி பிரிவில் ஒரு புதிய இலக்கிடத்தை அமைக்கும் வகையில் இம்மாடல்கள் வடிவமைக்கப்பட்டுள்ளது.இந்த புதிய மோட்டார் சைக்கிள்கள் , நுண்ணறிவு, அற்புதமான செயல்திறன், மேம்பட்ட தொழில்நுட்பம் மற்றும் ஆக்ரோஷமான வடிவமைப்பு ஆகியவற்றை ஒருங்கிணைத்து, புதிய தலைமுறை செயல்திறன் ஆர்வலர்களுக்கு அட்ரினலின் நிறைந்த ஓட்டும் அனுபவத்தை வழங்குகின்றன.

பஜாஜ் ஆட்டோ நிறுவனத்தின் இருசக்கர வாகன வணிகப் பிரிவின் தலைமை வணிக அதிகாரி சாரங் கனடே கூறுகையில், " பல்சர் என் 160 பிளாட்ஃபார்ம் நாடு முழுவதும் உள்ள ஓட்டுநர்களிடமிருந்து பெரும் வரவேற்பை பெற்றுள்ளதுடன், இந்தப் பிரிவில் மிகச் சிறந்த செயல்திறன் கொண்ட மாடல்களில் ஒன்றாகவும் திகழ்கிறது. புதிய பல்சர் என் 160 எஸ் மற்றும் முதன்மை மாடலான பல்சர் என் 160 எஸ்எஸ்ஐ அறிமுகப்படுத்துவதன் மூலம், அந்த வெற்றியை நாங்கள் மேலும் முன்னெடுத்துச் செல்கிறோம். இன்டெலிஜென்ட் த்ராட்டில் (ETB) இந்த புதிய தலைமுறைக்கு அடித்தளமாக அமைகிறது. இது, பிரிவில் முன்னணி செயல்திறனை வழங்குவதோடு, ரெஸ்பான்சிவ் ரைடு மோட்ஸ், க்ரால் டெக்னாலஜி மற்றும் ரெஸ்பான்சிவ் ட்ராக்ஷன் கண்ட்ரோல் போன்ற மேம்பட்ட தொழில்நுட்பங்களையும் செயல்படுத்துகிறது. என்.160, என்160 எஸ் மற்றும் என் 160 எஸ்எஸ் ஆகிய மூன்றும் இணைந்து, 160சிசி பிரிவிற்கான தரத்தை உயர்த்தும் ஒரு முழுமையான செயல்திறன் தொகுப்பை ஓட்டுநர்களுக்கு வழங்குகின்றன, என்றார்.

# ஆடி அமாவாசை கொடை விழா தொழிலதிபர் ஏற்பாட்டில் அன்னதானம்



நாகர்கோவில் மாநகராட்சிக்கு உட்பட்ட வடசேரி புளியடி பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ பிரம்மசக்தி மயான மாசான சுடலை ஆண்டவர் திருக்கோவிலில் ஆடி அமாவாசை கொடைவிழா வெகு விமரிசையாக நடைபெற்றது. இவ்விழாவை முன்னிட்டு, தமிழக வெற்றிக் கழகத்தின் குமரி கிழக்கு மாவட்டம் சார்பில் பக்தர்களுக்கும், பொதுமக்களுக்கும் சிறப்பு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த நலத்திட்ட அன்னதான நிகழ்வை த.வெ.க. பிரமுகரும், பிரபல தொழிலதிபருமான பால்ராஜ் முன்னின்று ஏற்பாடு செய்திருந்தார். சிறப்புமிக்க இந்த நிகழ்வுக்கு குமரி கிழக்கு மாவட்ட செயலாளர்மாதவன்நேரில்வருகை தந்து அன்னதானத்தை தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் கோவில் கௌரவத் தலைவர் புளியடி பால்ராஜ், த.வெ.க. இணைச்செயலாளர்பிரேம் குமார், மாவட்டத் தொண்டரணி இணை அமைப்பாளர் அசோக் செல்லம், மாநகராட்சி கவுன்சிலர் ஸ்ரீலிஜா, தோவாளை மத்திய ஒன்றியச் செயலாளர் விஜய் மற்றும் அகஸ்தீஸ்வரம் ஒன்றியச் செயலாளர் மெர்சல்முகேஷ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மேலும், கழகத்தின் வார்டு வட்ட செயலாளர்களான விஜயகுமார்(8வது வார்டு), சசி (9வது வார்டு), ஆனந்த் செல்லம் (11வது வார்டு), அஜித் (12வது வார்டு), ஜெரின் (15வது வார்டு) ஆகியோருடன் கழக நிர்வாகிகள் ஆனந்த், மில்டன், அர்ஜுன், கோவில் நிர்வாகிகள் மற்றும் திரளான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி மாவட்டம் ராயக்கோட்டை சாலையில் உள்ள கிருஷ்ணகிரி ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் சுற்றுச்சூழல் பாதுகாப்பை வலியுறுத்தி மரக்கன்றுகள் நடும் விழா மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதி லதா அவர்கள் தலைமை வைத்து மரக்கன்றுகள் நடும் பணியை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் வனத்துறை அலுவலர்கள் மற்றும் வழக்கறிஞர்கள் மற்றும் காவல் துறையினர் பங்கேற்றனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.